World Tamil Christian Fellowship
60, High Worple, Rayners Lane, Harrow
Middlesex, HA2 9SZ, United Kingdom
www.wcflondon.com
wcflondon@gmail.com

# இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை – பாடம் 15

## உபத்திரவம் – 09

## இஸ்ரவேல் உபத்திரவத்திற்குள் கடந்து செல்லும்

முதலில் இதை யாக்கோபின் இக்கட்டுக்கலாம் என்று என்று வேதவசனம் தெளிவுபடுத்துகிறது.

**எரேமியா 30:7,** ஐயோ! அந்த நாள் பெரியது; அதைப்போலொத்த நாளில்லை; அது யாக்கோபுக்கு இக்கட்டுக்காலம்; ஆனாலும் அவன் அதற்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவான்.

மேற்கூறிய வசனம் இரண்டு காரியங்களை நமக்கு காண்பிக்கிறது,

1. அது யாக்கோபின் இக்கட்டுக்கலாம்
2. அவர்கள் இரட்சிக்கப்படுவார்கள்

யாக்கோபின் குடும்பத்தை சேர்ந்தவர்களுக்கு,

**லூக்கா 1:31-33,** 31 இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப்
பெறுவாய்; அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. 32 அவர்
பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். 33 அவர்

*யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது* என்றான்.

## முன்னுரை

ஏசாயா, எசேக்கியேல், தானியேல், யோவேல், செப்பனியா, சகரியா மற்றும் பலரை உள்ளடக்கிய பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன புத்தகங்கள் எல்லாம் உபத்திரத்தைக் குறித்த செய்திகளால் நிறைந்திருக்கின்றது. இதைக் குறித்து இயேசு கிறிஸ்து பேசியுள்ளார், பேதுரு அபோஸ்தலர் புத்தகத்தின் ஆரம்பத்தில் பேசியுள்ளார், மேலும் பவுல் தெசலோனிக்கேயருக்கு எழுதிய தன்னுடைய இரண்டு நிருபங்களிலும் எழுதியுள்ளார். உபத்திரவத்தைக் குறித்த விஷயங்கள் வெளிப்படுத்தல் புத்தகத்தில் எழுதிருப்பதைக் காட்டிலும் மற்ற புத்தகங்களில் அதிக அளவில் எழுதப்பட்டுள்ளது.

## இஸ்ரவேலின் சிதறடிப்பு மற்றும் மீண்டும் கூட்டிச் சேர்த்தல்

பழைய ஏற்பாட்டில், தேவன் தான் கொடுக்கும் இடமாகிய இஸ்ரவேல் தேசத்திலிருந்து எடுத்து மற்ற எல்லா தேசங்களுக்கும் சிதறடிக்கப்படுவார்கள். அங்கு அவர்கள் மிகுந்த உபத்திரவங்களுக்கு உள்ளாவார்கள் என்று அவரே முன்னறிந்து கூறியுள்ளார்.

**உபாகமம்** *28:63-67,* [63]கர்த்தர் உங்களுக்கு நன்மை செய்யவும் உங்களைப் பெருகப்பண்ணவும் எப்படி உங்கள் மேல் இரம்மியமாயிருந்தாரோ, அப்படியே கர்த்தர் உங்களை அழிக்கவும் உங்களை அதம்பண்ணவும்

இரம்மியமாயிருப்பார்; நீங்கள் சுதந்தரிக்கப்போகிற தேசத்திலிருந்து பிடுங்கிப்போடப்படுவீர்கள். [64]கர்த்தர் உன்னைப் பூமியின் ஒரு முனைதுவக்கி பூமியின் மறுமுனைமட்டும் இருக்கிற எல்லா ஜனங்களுக்குள்ளும் சிதற அடிப்பார்; அங்கே நீயும் உன் பிதாக்களும் அறியாத மரமும் கல்லுமான அந்நிய தேவர்களைச் சேவிப்பாய். [65]அந்த ஜாதிகளுக்குள்ளே உனக்கு இளைப்பாறுதல் இராது, உன் உள்ளங்கால்கள் தங்கித் தரிக்க இடமும் இராது; அங்கே கர்த்தர் உனக்குத் தத்தளிக்கிற இருதயத்தையும், சோர்ந்துபோகிற கண்களையும், மனச்சஞ்சலத்தையும் கொடுப்பார். [66]உன் ஜீவன் உனக்குச் சந்தேகத்தில் ஊசலாடும்; உன் ஜீவனைப்பற்றி நம்பிக்கையில்லாமல் இரவும் பகலும் திகில் கொண்டிருப்பாய். [67]நீ பயப்படும் உன் இருதயத்தின் திகிலினாலும், உன் கண்கள் காணும் காட்சியினாலும், விடியற்காலத்தில் எப்பொழுது சாயங்காலம் வருமோ என்றும், சாயங்காலத்தில், எப்பொழுது விடியற்காலம் வருமோ என்றும் சொல்லுவாய்.

இஸ்ரவேல் தேச மக்கள் தங்களுடைய சொந்த தேசத்தை 1967இல் பெறுவதற்கு முன்னர், அவர்கள் எவ்வாறு பல நூற்றாண்டுகளாக சிதறிடிக்கப்பட்டு வேறு தேசங்களில் உள்ளனர் என்பதை வரலாறு நமக்கு காண்பிக்கிறது.

**உபாகமம் 30:1-3**, [1]“நான் உனக்கு முன்பாக வைத்த ஆசீர்வாதமும் சாபமுமாகிய இந்தக் காரியங்களெல்லாம் உன்மேல் வரும்போது: நீ உன் தேவனாகிய கர்த்தரால் துரத்திவிடப்பட்டு, எல்லா ஜாதிகளிடத்திலும் போயிருக்கும்போது, நீ உன் இருதயத்திலே சிந்தனைசெய்து, [2]உன் தேவனாகிய கர்த்தரிடத்துக்கே திரும்பி, இன்று நான்

உனக்குக் கற்பிக்கிறபடியெல்லாம், நீயும் உன் பிள்ளைகளும் உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் அவருடைய சத்தத்திற்குச் செவிகொடுத்தால், [3]உன் தேவனாகிய கர்த்தர் உன் சிறையிருப்பைத் திருப்பி, உனக்கு இரங்கி, உன் தேவனாகிய கர்த்தர் உன்னைச் சிதற அடித்த எல்லா ஜனங்களிடத்திலும் இருக்கிற உன்னைத் திரும்பச் சேர்த்துக்கொள்ளுவார்.

நேபுகாத்நேச்சார் *(Nebuchadnezzar)*, என்ற பாபிலோனின் ராஜா இஸ்ரவேலை *2500*க்கும் மேற்பட்ட ஆண்டுகளுக்கு முன்னரே கைப்பற்றினார். அந்நாளிலிருந்து *1967* வரை அவர்கள் சிதறடிக்கப்பபட்டு வேறு தேசங்களில் உள்ளனர். ஒரு சிறிய பிரிவினர் திரும்பி வந்திருந்தாலும் இன்னும் பெரும்பாலார் வெளியிலேயே உள்ளனர்.

தேவன் இந்த சிதறடிக்கப்படுவதையும் மற்றும் திரும்ப கூட்டி சேர்த்தலையும் பற்றி தீர்க்கதரிசியான ஓசியாவின் மூலம் பேசினார்.

**ஓசியா *3:4-5***, [4]இஸ்ரவேல் புத்திரர் அநேகநாள் ராஜா இல்லாமலும், அதிபதி இல்லாமலும், பலி இல்லாமலும், சிலை இல்லாமலும், ஏபோத் வஸ்திரம் இல்லாமலும், தேராபீம் இல்லாமலும் இருப்பார்கள். [5]பின்பு இஸ்ரவேல் புத்திரர் திரும்பி, தங்கள் தேவனாகிய கர்த்தரையும், தங்கள் ராஜாவாகிய தாவீதையும் தேடி, கடைசிநாட்களில் கர்த்தரையும், அவருடைய தயவையும் நாடி அஞ்சிக்கையாய் வருவார்கள்.

*தீர்க்கதரிசியான ஓசியாவின் மூலம் தேவன் கூறியதாவது,*

- *இராஜா இல்லை*
- *அதிபதி இல்லை*
- *பலி இல்லை*
- *ஏபோத் (ephod) இல்லை*
- *தேராபீம் (teraphim) இல்லை*

*அவர்கள் கடைசி நாட்களில் தேவனிடம் திரும்புவார்கள். அவர்கள் திரும்பி தேவனையும் தாவீதையும் தங்களுடைய இராஜாவாக தேடுவார்கள். இதுவே இறுதி நாட்களுக்கான தெளிவான அறிகுறி.*

***எரேமியா 16:14-15,*** *[14] "ஆதலால், இதோ, நாட்கள்வரும், அப்பொழுது இஸ்ரவேல் புத்திரரை எகிப்துதேசத்திலிருந்து வரப்பண்ணின கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு இனிமேல் சத்தியம்பண்ணாமல், [15] இஸ்ரவேல் புத்திரரை வடதேசத்திலும் தாம் அவர்களைத் துரத்திவிட்ட எல்லா தேசங்களிலுமிருந்து வரப்பண்ணின கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சத்தியம்பண்ணுவார்கள்; நான் அவர்கள் பிதாக்களுக்குக் கொடுத்த அவர்களுடைய தேசத்துக்கு அவர்களைத் திரும்பி வரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.*

***ஆமோஸ் 9:9,*** *"இதோ, ஜல்லடையினால் சலித்தரிக்கிறதுபோல் இஸ்ரவேல் வம்சத்தாரை எல்லா ஜாதிகளுக்குள்ளும் சலித்தரிக்கும்படிக்கு நான் கட்டளையிடுவேன்; ஆனாலும் ஒரு கோதுமைமணியும் தரையிலே விழுவதில்லை.*

அவர்கள் எல்லா தேசங்களிலும் சிதறிடிக்கப்படுவார்கள். சிதறிடிக்கப்பட்ட இஸ்ரவேல் மக்களை நாம் பார்த்தோமானால், தேவன் அவர்களை சிதறிடித்த விதத்தை நாம் அறிந்துகொள்ளலாம்.

***ஏசாயா 11:11-12***, [11]அக்காலத்திலே, ஆண்டவர் அசீரியாவிலும், எகிப்திலும், பத்ரோசிலும், எத்தியோப்பியாவிலும், பெர்சியாவிலும், சிநெயாரிலும், ஆமாத்திலும், சமுத்திரத் தீவுகளிலும், தம்முடைய ஜனத்தில் மீதியானவர்களை மீட்டுக்கொள்ளத் திரும்ப இரண்டாம்விசை தமது கரத்தை நீட்டி, [12]ஜாதிகளுக்கு ஒரு கொடியை ஏற்றி, இஸ்ரவேலில் துரத்துண்டவர்களைச் சேர்த்து, யூதாவில் சிதறடிக்கப் பட்டவர்களை பூமியின் நான்கு திசைகளிலுமிருந்து கூட்டுவார்.

தேவன் ஏசாயா தீர்க்கதரிசியின் மூலம் தாம் அவர்களை இரண்டாம் முறையாக மீண்டும் கொண்டுவருவதாக கூறினார். மேலும் அவர்களே மீதமுள்ளவர்கள்(Remnant). அவர்களை தங்களுடைய இடங்களிலிருந்து தூர எறிந்த போதிலும் அவர்கள் மேலே கூறப்பட்டுள்ள இந்த தேசங்களுக்கு செல்லவில்லை. ஆனால் இறுதியில் தொலைவில் உள்ள இந்த தேசங்களுக்கு போய்ச்சேர்ந்தனர்.

***எசேக்கியேல் 34:12-13***, [12]ஒரு மேய்ப்பன் சிதறுண்ட தன் ஆடுகளின் நடுவே இருக்கிற நாளில் தன் மந்தையைத் தேடிக்கொண்டிருக்கிறதுபோல, நான் என் ஆடுகளைத் தேடி, மப்பும் மந்தாரமுமான நாளிலே அவைகள் சிதறுண்டுபோன எல்லா இடங்களிலுமிருந்து அவைகளைத் தப்பி வரப்பண்ணி, [13]அவைகளை ஜனங்களிடத்திலிருந்து புறப்படவும்

தேசங்களிலிருந்து சேரவும்பண்ணி, அவைகளுடைய சுயதேசத்திலே அவைகளைக் கொண்டுவந்து, இஸ்ரவேல் மலைகளின்மேலும் ஆறுகள் அண்டையிலும் தேசத்தின் சகல வாசஸ்தலங்களிலும் அவைகளை மேய்ப்பேன்.

எசேக்கியேல் *37*, உலர்ந்த எலும்புகளின் தீர்க்கதரிசனம் இஸ்ரவேலுக்குரியது. அந்த முழு பத்தியையும் நீங்கள் படித்தால் தேவன் ஒரு படையை இஸ்ரவேலுக்காக எழுப்புவதை காணலாம்.

**எசேக்கியேல்** ***37:11-14***, [11]அப்பொழுது அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, இந்த எலும்புகள் இஸ்ரவேல் வம்சத்தார் அனைவருமே; இதோ, அவர்கள் எங்கள் எலும்புகள் உலர்ந்துபோயிற்று; எங்கள் நம்பிக்கை அற்றுப்போயிற்று; நாங்கள் அறுப்புண்டுபோகிறோம் என்கிறார்கள். [12]ஆகையால் நீ தீர்க்கதரிசனம் உரைத்து, அவர்களோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார், இதோ, என் ஜனங்களே, நான் உங்கள் பிரேதக்குழிகளைத் திறந்து, உங்களை உங்கள் பிரேதக்குழிகளிலிருந்து வெளிப்படவும், உங்களை இஸ்ரவேல் தேசத்துக்குவரவும்பண்ணுவேன். [13]என் ஜனங்களே, நான் உங்கள் பிரேதக்குழிகளைத் திறந்து, உங்களை உங்கள் பிரேதக்குழிகளிலிருந்து வெளிப்படப்பண்ணும்போது, நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள். [14]என் ஆவியை உங்களுக்குள் வைப்பேன்; நீங்கள் உயிரடைவீர்கள்; நான் உங்களை உங்கள் தேசத்தில் வைப்பேன்; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள்; இதைச் சொன்னேன், இதைச் செய்வேன் என்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றார்.'"

தேவன் சரீர சம்பந்தமாகவும் ஆவிக்குரிய வகையிலும் இறந்த ஒரு படையை எல்லா தேசங்களின் மத்தியில் தன்னுடைய நாமத்துக்கு மகிமை உண்டாவதற்காக, எழுப்புவார்.

**செப்பனியா** *1:14-15,* [14]கர்த்தருடைய பெரியநாள் சமீபித்திருக்கிறது; அது கிட்டிச்சேர்ந்து மிகவும் தீவிரித்து வருகிறது; கர்த்தருடைய நாள் என்கிற சத்தத்துக்குப் பராக்கிரமசாலி முதலாய் அங்கே மனங்கசந்து அலறுவான்.
[15]அந்த நாள் உக்கிரத்தின் நாள்; அது இக்கட்டும் இடுக்கமுமான நாள்; அது அழிவும் பாழ்க்கடிப்புமான நாள்; அது இருளும் அந்தகாரமுமான நாள்; அது மப்பும் மந்தாரமுமான நாள்.

அதனால், தேவன் இஸ்ரவேலை மீண்டும் தங்களுடைய சொந்த தேசத்திற்கு கொண்டுவரப்போகிறார் என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். அவர்கள் தேவனாகிய இயேசு கிறிஸ்துவை நிராகரித்ததற்காக உபத்திரவத்தை சந்திக்கபோகின்றனர்.

**சகரியா** *13:8-9,* [8]தேசமெங்கும் சம்பவிக்கும் காரியம் என்னவென்றால், அதில் இருக்கிற இரண்டு பங்கு மனுஷர் சங்கரிக்கப்பட்டு மாண்டுபோவார்கள்; மூன்றாம் பங்கோ அதில் மீதியாயிருக்கும். [9]அந்த மூன்றாம் பங்கை நான் அக்கினிக்குட்படப்பண்ணி, வெள்ளியை உருக்குகிறதுபோல அவர்களை உருக்கி, பொன்னைப் புடமிடுகிறதுபோல அவர்களைப் புடமிடுவேன்; அவர்கள் என் நாமத்தைத் தொழுதுகொள்வார்கள்; நான் அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்பேன்; இது என் ஜனமென்று நான் சொல்லுவேன், கர்த்தர் என் தேவனென்று அவர்கள் சொல்லுவார்கள்.'"

*மூன்றில் இரண்டு பங்கு மக்கள் இறப்பார்கள். மூன்றில் ஒரு பங்கு மக்கள் தான் நெருப்பினால் இரட்சிக்கப்படுவார்கள்.*

*இஸ்ரவேல் தேசம் உபத்திரவத்திற்கு முன்னரே தேவனால் நிறுவப்பட்டுவிடும். மீண்டும் உபத்திரவகாலத்தின் போது அவர்கள் சிதறியடிக்கப்டுவார்கள்.*

***வெளி** 7:4, முத்திரைபோடப்பட்டவர்களின் தொகையைச் சொல்லக்கேட்டேன்; இஸ்ரவேல் புத்திரருடைய சகல கோத்திரங்களிலும் முத்திரைபோடப்பட்டவர்கள் இலட்சத்துநாற்பத்து நாலாயிரம் பேர்:*

*மீண்டும் சுவிசேஷம் பிரசங்கிக்கின்றபணி யூதரிடம் கொடுக்கப்படுவதை நாம் பார்க்கலாம். அவர்கள் புறஜாதியார் அல்ல. சபை பூமியில் உபத்திரவம் துவங்குவதற்கு முன் இரகசிய வருகையின் போது இயேசுவோடு எடுத்துக்கொள்ளப்படும் என்பதை இது காட்டுகிறது. அடுத்த பாடத்தில் யார் இந்த 144,000 பேர் என்பதை நாம் தெளிவாக பார்ப்போம்.*

***வெளி 11:8 & 13,** [8]அவர்களுடைய உடல்கள் மகாநகரத்தின் விசாலமான வீதியிலே கிடக்கும். அந்த நகரம் சோதோம் என்றும் எகிப்து என்றும் ஞானார்த்தமாய்ச் சொல்லப்படும்; அதிலே நம்முடைய கர்த்தரும் சிலுவையிலே அறையப்பட்டார்.*

*[13]அந்நேரத்திலே பூமி மிகவும் அதிர்ந்தது, உடனே அந்த நகரத்தில் பத்திலொருபங்கு இடிந்து விழுந்தது; மனுஷரில் ஏழாயிரம்பேர் பூமியதிர்ச்சியினால் அழிந்தார்கள்;*

மீதியானவர்கள் பயமடைந்து பரலோகத்தின் தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

**வெளி** *12:13-14,* [13]வலுசர்ப்பமானது தான் பூமியிலே தள்ளப்பட்டதை அறிந்து, அந்த ஆண்பிள்ளையைப்பெற்ற ஸ்திரீயைத் துன்பப்படுத்தினது. [14]ஸ்திரீயானவள் அந்தப் பாம்பின்முகத்திற்கு விலகி, ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமுமாகப் போஷிக்கப்படத்தக்கதாய் வனாந்தரத்திலுள்ள தன் இடத்திற்குப் பறந்துபோகும்படி பெருங்கழுகின் இரண்டு சிறகுகள் அவளுக்குக் கொடுக்கப்பட்டது.

தொடர்ச்சியாக சில நிகழ்வுகள் நடப்பதை நாம் காணலாம். சுவிசேஷம் 144,000 மக்கள் மூலமாக மீண்டும் பிரசங்கிக்கப்படுகிறது.

பெரிய நில அதிர்வுகளால் மக்கள் கொல்லப்படுகிறார்கள்.

இந்த நேரத்தில் தான் இஸ்ரவேலுக்கு பறக்க இறக்கை கொடுக்கப்படுகிறது.

பறந்து எங்கே செல்ல?

வனாந்திரத்திற்கு செல்வதற்காக. இங்கே மீண்டும் தங்கள் நகரங்களை விட்டு அடுத்த 3 ½ ஆண்டுகள் அவர்கள் துரத்தப்படுவதை நாம் காணலாம்.

பிறகு தேவன் திரும்ப, ஆயிரவருட அரசாட்சி (மிலேனியும் *millennium*) துவங்குகிறது.

## தேசத்துக்கு நிலம் இருந்தேயாக வேண்டும்.

*இஸ்ரவேல் மகா உபத்திரவத்திற்குள் கடந்து செல்ல அவர்கள் தங்கள் தேசத்தில் மீண்டும் நாட்டப்பட்டிருக்கவேண்டும். அதனால், நாம் அந்த இரண்டு உடன்படிக்கையையும் பார்ப்போம். ஒன்று தேவனுக்கும் இஸ்ரவேலுக்கும் இடையில் ஏற்பட்டது. மற்றோன்று வரப்போகும் உபத்திரவ காலத்திற்கு முன்பு அந்திகிறிஸ்துவோடும் இஸ்ரவேலோடும் மற்றும் உலக தலைவர்களோடும் நிகழும்.*

# தேவனும் இஸ்ரவேலும்

*நாம் மீண்டுமாய் தேவன் ஆபிரகாமோடுபன்னிய உடன்படிக்கையை காண்போம்.*

**ஆதியாகமம்** *12:1-3, [1]கர்த்தர் ஆபிராமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ. [2]நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். [3]உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்."*

*தேவன் ஆபிரகாமை அழைத்தபோது அவன் கல்தேயர் (Chaldeans) தேசத்தின் ஊர் (Ur) என்கிற பட்டிணத்தில் வாழ்ந்து வந்தான்.*

*வ2, தேவன் இந்த உடன்படிக்கையை ஆபிரகாமோடு தனிப்பட்ட நிலையில் ஏற்படுத்தினார்.*

*வ3 இல், தேவன் இந்த உடன்படிக்கையை பூமியிலுள்ள வம்சங்கள் எல்லோரிடமும் நீட்டித்தார். ஆபிரகாமின் சந்ததியிலிருந்து தேசங்கள் எழும்பும்.*

*வ7, ஆபிரகாமின் சந்ததிக்கு இந்தத் தேசத்தைக் கொடுப்பேன் என்பதை தேவன் உறுதிப்படுத்தினார்.*

*தேவன் இந்தத் தேசத்தைக் கொடுப்பதாக வாக்குத்தத்தம் செய்தார். இந்த தேசத்தை* ***ஆதியாகமம் 13:14–16,*** *இல் விவரித்துள்ளார்,*

*[14]லோத்து ஆபிராமைவிட்டுப் பிரிந்தபின்பு, கர்த்தர் ஆபிராமை நோக்கி: உன் கண்களை ஏறெடுத்து, நீ இருக்கிற இடத்திலிருந்து வடக்கேயும், தெற்கேயும், கிழக்கேயும், மேற்கேயும் நோக்கிப்பார். [15]நீ பார்க்கிற இந்தப் பூமி முழுவதையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றைக்கும் இருக்கும்படி கொடுத்து, [16]உன் சந்ததியைப் பூமியின் தூளைப்போலப் பெருகப்பண்ணுவேன்; ஒருவன் பூமியின் தூளை எண்ணக்கூடுமானால், உன் சந்ததியும் எண்ணப்படும்.*

*நான் இந்த தேசத்தை உன் சந்தததிக்கு என்றென்றைக்கும் தறப்போவதாக தேவன் ஆபிரகாமிடம் கூறினார்.*

*இந்த தேசத்தின் அளவை* ***ஆதியாகமம்*** *15:18-21இல் குறிப்பிட்டுள்ளார்,*

[18] *அந்நாளிலே கர்த்தர் ஆபிராமோடே உடன்படிக்கைபண்ணி, எகிப்தின் நதி துவக்கி ஐபிராத்து நதி என்னும் பெரிய நதிமட்டுமுள்ளதும்* [19] *கேனியரும், கெனிசியரும், கத்மோனியரும்,* [20] *ஏத்தியரும், பெரிசியரும், ரெப்பாயீமியரும்,* [21] *எமோரியரும், கானானியரும், கிர்காசியரும், எபூசியரும் என்பவர்கள் இருக்கிறதுமான இந்தத் தேசத்தை உன் சந்ததிக்குக் கொடுத்தேன் என்றார்."*

*எனவே, நைல் (Nile) நதிக்கும் எப்பிராத்து (Euphrates) நதிக்கும் இடையிலான தேசம்.*

***ஆதியாகமம்*** *17:1-8,* [1] *ஆபிராம் தொண்ணூற்றொன்பது வயதானபோது, கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனமாகி: நான் சர்வவல்லமையுள்ள தேவன்; நீ எனக்கு முன்பாக நடந்துகொண்டு உத்தமனாயிரு.* [2] *நான் உனக்கும் எனக்கும் நடுவாக என் உடன்படிக்கையை ஏற்படுத்தி, உன்னை மிகவும் திரளாய்ப் பெருகப்பண்ணுவேன் என்றார்.* [3] *அப்பொழுது ஆபிராம் முகங்குப்புற விழுந்து வணங்கினான். தேவன் அவனோடே பேசி:* [4] *நான் உன்னோடே பண்ணுகிற என் உடன்படிக்கை என்னவென்றால், நீ திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாவாய்.* [5] *இனி உன் பேர் ஆபிராம் என்னப்படாமல், நான் உன்னைத் திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாக ஏற்படுத்தினபடியால், உன் பேர் ஆபிரகாம் என்னப்படும்.* [6] *உன்னை மிகவும் அதிகமாய்ப் பலுகப்பண்ணி, உன்னிலே ஜாதிகளை உண்டாக்குவேன்; உன்னிடத்திலிருந்து ராஜாக்கள் தோன்றுவார்கள்.* [7] *உனக்கும் உனக்குப் பின்வரும் உன்*

சந்ததிக்கும் நான் தேவனாயிருக்கும்படி எனக்கும் உனக்கும், உனக்குப்பின் தலைமுறை தலைமுறையாக வரும் உன் சந்ததிக்கும் நடுவே, என் உடன்படிக்கையை நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன். [8]நீ பரதேசியாய்த் தங்கிவருகிற கானான் தேசமுழுவதையும், உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நித்திய சுதந்தரமாகக் கொடுத்து, நான் அவர்களுக்குத் தேவனாயிருப்பேன் என்றார்."

- தேவன் ஆபிரகாமுடன் உன்னிலிருந்து நான் ஒரு தேசத்தை உருவாக்குவேன் என கூறி ஒரு உடன்படிக்கையை செய்தார்.
- ஆபிரகாமின் மூலம் தேசங்களிலுள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்.
- நைல் (Nile) நதிக்கும் எப்பிராத்து (Euphrates) இடையிலான தேசத்தை தேவன் ஆபிரகாமுக்கு கொடுப்பார்.
- ஆபிரகாமின் சந்ததிக்கு இந்த தேசத்தை கொடுப்பார்.
- இந்த தேசம் இஸ்ரவேலுக்கு நித்திய உடைமையாகும் என்று தேவன் வாக்குறுதி அளித்துள்ளார்.
- ஆபிரகாமின் சந்ததி நித்தியத்துக்கும் அந்த தேசத்தை சுதந்தரிப்பார்கள் என்று தேவன் தன் மனதில் எண்ணியிருந்தார்.

தேவனுடையை வாக்குதத்தமாவது "நான் என்னுடனே ஒரு வாக்குறுதி செய்து கொண்டேன்". தேவன் தன்னுடனே ஆணையிட்டுக்கொண்டார். எனவே, அதை மீறுவதற்கு எதுவும் இல்லை.

*ஏன்?*

*ஆபிரகாமின் கீழ்பிடிதலால் அந்த நிபந்தனையற்ற உடன்படிக்கை எல்லா காலத்திற்கும் முத்திரை போடப்பட்டது. அதை மீறமுடியாது. அவ்விதமாய், தேவன் இஸ்ரவேலுக்கு ஒரு எதிர்காலம் வைத்திருக்கிறார் என்று வேதவாக்கியங்கள் கூறுகிறது. இஸ்ரவேலாகிய தேசம்.*

***சங்கீதம் 89:34**, என் உடன்படிக்கையை மீறாமலும், என் உதடுகள் விளம்பினதை மாற்றாமலும் இருப்பேன்.*

*தேவன் தன்னுடைய வார்த்தையை எந்தவொரு பிரச்சனையும் இன்றி நிறைவேற்றுவார்.*

*ஆகையால், மகா உபத்திரவத்தின் போது யூதர்கள் தங்கள் தேசத்தை விட்டு தப்பியோடும்படி சொன்னதை நீங்கள் பார்ப்பீர்கள்.*

***மத்தேயு 24:16**, யூதேயாவில் இருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகக்கடவர்கள்.*

*இஸ்ரவேலர்களுக்கு ஒரு இராஜ்ஜியம் உண்டென்று வேதாகமும் கூறுகிறது. தேசம் அவர்களிடத்தில் இல்லை ஆனால் உபாத்திரவத்திற்கு முன்னாள் அது அவர்களிடம் இருக்கும்.*

*அந்த தேசத்தையும் இராஜ்ஜியத்தையும் பெற இஸ்ரவேலர்கள் சுற்றியிருப்பார்கள் என்றால், நிச்சயமாக அவர்கள் உபத்திரவத்தின் போதும் இருக்க வேண்டும்.*

*அவ்விதமாய், முதல் உடன்படிக்கை இஸ்ரவேல் தேசமானது உபத்திரவத்திற்குள் செல்லும் என்பதை உறுதிப்படுத்தியது.*

## *சாத்தானுடனான உடன்படிக்கை (Satanic Covenant)*

**தானியேல்** *9:27,* அவர் ஒரு வாரமளவும் அநேகருக்கு உடன்படிக்கையை உறுதிப்படுத்தி, அந்த வாரம் பாதி சென்றபோது பலியையும் காணிக்கையையும் ஒழியப்பண்ணுவார்; அருவருப்பான செட்டைகளோடே பாழாக்குகிறவன் வந்து இறங்குவான், நிர்ணயிக்கப்பட்டிருக்கிற நிர்மூலம் பாழாக்குகிறவன்மேல் தீருமட்டும் சொரியும் என்றான்."

இஸ்ரவேல் தேசத்தோடு உலக தலைவனாக அந்திகிறிஸ்து சமாதானத்தின் மூலம் 7 வருடங்கள் ஒப்பந்தம் செய்வான்.

ஆனால் அங்கு இஸ்ரவேலர்கள் ஆராதிக்க மற்றும் பலி செலுத்த ஒரே சிக்கல் அங்குதேவாலயம் இல்லை, ஓமரின் (Omar) மசூதி அங்குள்ளது.

உலகத் தலைவனாகிய சாத்தான், யூதர்களுக்கு தங்களுடையை தேவனை ஆராதிக்கவும் பலி செலுத்தவும் அதிகாரம் தருவான். இதை செய்வதன் மூலம் அவன் இஸ்ரவேலுடன் ஒரு உடன்படிக்கை செய்துகொள்ளக்கூடும்.

அரசியல் ஆட்சியாளரக அந்திகிறிஸ்து இஸ்ரவேலோடு 3½ ஆண்டுகள் சமாதானத்துடன் செயல்படுவான். அவன் உலக அமைப்புகள் மீது முழு கட்டுப்பாடுக்குள் கொண்டுவருவான்.

3½ ஆண்டுகளுக்கு பிறகு அவன் இஸ்ரவேலர்கள் ஆராதிப்பதையும் பலி செலுத்தவதையும் பலவந்தமாக நிறுத்தி தன்னை ஆராதிக்கும்படி கட்டளையிடுவான்.

***2 தெசலோனிக்கேயர்** 2:4, அவன் எதிர்த்துநிற்கிறவனாயும், தேவன் என்னப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான்.*

***வெளி** 13:8, உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள் யாவரும் அதை வணங்குவார்கள்.*

***வெளி** 13:12, அது முந்தின மிருகத்தின் அதிகாரம் முழுவதையும் அதின் முன்பாக நடப்பித்து, சாவுக்கேதுவான காயம் ஆறச்சொஸ்தமடைந்த முந்தின மிருகத்தைப் பூமியும் அதின் குடிகளும் வணங்கும்படி செய்தது.*

*அந்திகிறிஸ்து தன்னையே தெய்வமாக நிலைதிருத்துவது தான் அருவருப்பானது!*

***தானியேல்** 9:27 முழுமையாக 7 ஆண்டு காலம் வரை.*

***மத்தேயு** 24 இயேசு யூதர்களை யூதேயாவில் இருந்து ஓடிப்போகக்கடவர்கள் என்று கூறினார்...*

***தானியேல்** 7:25, அவர் உன்னதமானவருடைய பரிசுத்தவான்களை ஒடுக்கி*

***தானியேல்** 12:1, "உன் ஜனத்தின் புத்திரருக்காக நிற்கிற பெரிய அதிபதியாகிய மிகாவேல் அக்காலத்திலே எழும்புவான். யாதொரு ஜாதியாரும் தோன்றினதுமுதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்; அக்காலத்திலே*

*புஸ்தகத்தில் எழுதியிருக்கிறவர்களாகக் காணப்படுகிற உன் ஜனங்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள்.*

*பிரதான தூதனாகிய மிகாவேல் தானியேலிடம் இது "உங்களுடைய" மக்களின் பிரச்சனை, புறஜாதியாருடையது அல்ல என விளக்கியதை வேதவசனம் நமக்கு தெளிவாக காட்டுகிறது.*

## இஸ்ரவேல் உபத்திரவத்தின் மூலமே இரட்சிக்கப்படும்:

***எரேமியா 31:8-10,*** *[8]இதோ, நான் அவர்களை வடதேசத்திலிருந்து வரப்பண்ணி, அவர்களைப் பூமியின் எல்லைகளிலிருந்து கூட்டிவருவேன்; குருடரும் சப்பாணிகளும், கர்ப்பவதிகளும், பிள்ளைத் தாய்ச்சிகளுங்கூட அவர்களில் இருப்பார்கள்; மகா கூட்டமாய் இவ்விடத்திற்குத் திரும்புவார்கள்.*
*[9]அழுகையோடும் விண்ணப்பங்களோடும் வருவார்கள்; அவர்களை வழிநடத்துவேன்; அவர்களைத் தண்ணீருள்ள நதிகளண்டைக்கு இடறாத செம்மையான வழியிலே நடக்கப்பண்ணுவேன்; இஸ்ரவேலுக்கு நான் பிதாவாயிருக்கிறேன், எப்பிராயீம் என் சேஷ்ட புத்திரனாயிருக்கிறான்.*
*[10]ஜாதிகளே, நீங்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, தூரத்திலுள்ள தீவுகளில் அறிவித்து, இஸ்ரவேலைச் சிதறடித்தவர் அதைச் சேர்த்துக்கொண்டு, ஒரு மேய்ப்பன் தன் மந்தையைக் காக்கும்வண்ணமாக அதைக் காப்பார் என்று சொல்லுங்கள்.'*

தேவன் இஸ்ரவேல் தேச மக்களை சேர்த்துக்கொண்டிருக்கிறார். மேலும் அவர் முழு உலகத்திலுள்ள எல்லா இஸ்ரவேல் மக்களையும் கூட்டிச்சேர்ப்பார். *k*

*2016இன் படி, உலகிலுள்ள யூதர்களின் மொத்த எண்ணிக்கை 173 லட்சம். அதில் 70 லட்சம் மக்கள் இஸ்ரவேலிலும் 60 லட்சம் மக்கள் அமெரிக்காவிலும் (U.S.A) உள்ளனர். பிரிடேனில் (UK) 3 லட்சம் மக்களும் இந்தியாவில் 5,000 மக்களும் வாழ்கின்றனர். கடந்த 20 ஆண்டுகளில் 5.5 லட்சம் மக்கள் உலகிலுள்ள பல தேசங்களில் இருந்தும் இஸ்ரவேலுக்கு திரும்பியுள்ளனர். இது தங்கள் சொந்த தேசத்தை விட்டு வெளி தேசங்களில் வாழும் மக்களின் ஒரு பங்கு தான்.*

அவர்களை எவ்வாறு ஒரு தேசமாக உருவாக்கப்போகிறார் என்றும் தன்னுடைய கரத்தில் ஒன்றாக இருக்க அவர்களை ஆயத்தம் பண்ணப்போவதைப் பற்றியும் தேவன் எசேக்கியேல் தீர்க்கதரிசியின் மூலம் கூறினார்.

**எசேக்கியேல்** *37: 15-28* தேவன் எசேக்கியேல் தீர்க்கதரிசியை ஒரு செயலை அடையாளமாக *(symbolically)* செய்யும்படி கூறினார்.

வ*16-17*, [16]மனுபுத்திரனே, நீ ஒரு கோலை எடுத்து, அதிலே யூதாவுக்கும் அதைச்சேர்ந்த இஸ்ரவேல் புத்திரருக்கும் அடுத்தது என்று எழுதி; பின்பு வேறொரு கோலை எடுத்து, அதிலே எப்பிராயீமுக்கும் அதைச்சேர்ந்த இஸ்ரவேல் வம்சத்தார் அனைவருக்கும் அடுத்த யோசேப்பின் கோலென்று எழுதி, [17]அவைகளை ஒரே கோலாகும்படி ஒன்றோடொன்று இசையச்செய், அவைகள் உன் கையில் ஒன்றாகும்.

முதலில் தேவன் தீர்க்கதரிசியை அடையாளமாக (symbolically) செய்து காட்டும்படி கூறினார். பிறகு தாமே செய்யப்போவதாக கூறினார். சரீரத்திலும் ஆவியிலும்.

வ19, நீ அவர்களை நோக்கி: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், இதோ, எப்பிராயீமுக்கும் அதைச்சேர்ந்த இஸ்ரவேல் கோத்திரங்களுக்கும் அடுத்த யோசேப்பின் கோலை எடுத்து, அதை யூதாவின் கோலோடே சேர்த்து, அவைகளை ஒரே கோலாக்குவேன்; அவைகள் என் கையில் ஒன்றாகும் என்கிறார் என்று சொல்.'

ஆகையால், இந்த 'அலியா' ('aliyah') எருசலேமுக்கு திரும்பிச் செல்லுதல் என்பது துவக்கமே. ஆனால் அவர்கள் மீண்டும் அங்கிருந்து துரத்தப்பபடுவார்கள்.

**வெளி** *12:13-14,* [13]வலுசர்ப்பமானது தான் பூமியிலே தள்ளப்பட்டதை அறிந்து, அந்த ஆண்பிள்ளையைப்பெற்ற ஸ்திரீயைத் துன்பப்படுத்தினது. [14]ஸ்திரீயானவள் அந்தப் பாம்பின்முகத்திற்கு விலகி, ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமுமாகப் போஷிக்கப்படத்தக்கதாய் வனாந்தரத்திலுள்ள தன் இடத்திற்குப் பறந்துபோகும்படி பெருங்கழுகின் இரண்டு சிறகுகள் அவளுக்குக் கொடுக்கப்பட்டது.

**ஏசாயா** *43:5,* பயப்படாதே, நான் உன்னோடே இருக்கிறேன்; நான் உன் சந்ததியைக் கிழக்கிலிருந்து வரப்பண்ணி, உன்னை மேற்கிலும் இருந்து கூட்டிச்சேர்ப்பேன்;

**எரேமியா** *32:37,* இதோ, என் சினத்திலும், என் கோபத்திலும், என் மகா உக்கிரத்திலும், நான் அவர்களைத் துரத்தின எல்லாத்

*தேசங்களிலுமிருந்து அவர்களைச் சேர்த்துக்கொண்டு, அவர்களை இந்த ஸ்தலத்துக்குத் திரும்பிவரவும் இதிலே சுகமாய்த் தங்கியிருக்கவும் பண்ணுவேன்.*

*இஸ்ரேலின் மறுசீரமைப்பிற்கான மகத்தான வாக்குறுதி.*

***ஏசாயா** 1:24-28,*
*[24]ஆகையால் சேனையின் கர்த்தரும் இஸ்ரவேலின் வல்லவருமாகிய ஆண்டவர் சொல்லுகிறதாவது: ஓகோ நான் என் சத்துருக்களில் கோபம் ஆறி, என் பகைஞருக்கு நீதியைச் சரிக்கட்டுவேன்.*
*[25]நான் என் கையை உன்னிடமாய்த் திருப்பி, உன் களிம்பு நீங்க உன்னைச் சுத்தமாய்ப் புடமிட்டு, உன் ஈயத்தையெல்லாம் நீக்குவேன்.*
*[26]உன் நியாயாதிபதிகளை முன்னிருந்ததுபோலவும் உன் ஆலோசனைக்காரரை ஆதியில் இருந்ததுபோலவும் திரும்பக்கட்டளையிடுவேன்; பின்பு நீ நீதிபுரம் என்றும், சத்தியநகரம் என்றும் பெயர் பெறுவாய்.*
*[27]சீயோன் நியாயத்தினாலும், அதிலே திரும்பி வருகிறவர்கள் நீதியினாலும் மீட்கப்படுவார்கள்.*
*[28]துரோகிகளும் பாவிகளுமோ ஏகமாய் நொறுங்குண்டு போவார்கள்; கர்த்தரைவிட்டு விலகுகிறவர்கள் நிர்மூலமாவார்கள்.*

*இங்கே தேவன்*

- *அவரது எதிரிகள் மீது பழிவாங்குதலையும்*
- *இஸ்ரவேல் தேசத்தை சுத்தப்படுத்துதலையும்,*
- *இஸ்ரேலின் நீதிபதிகள் மீட்டலையும்,*
- *மீறுபவர்களையும் பாவிகளையும் அழித்தலையும்.*

*காண்கிறோம்*

இவை அனைத்தும் அடுத்த அதிகாரத்தின் ஆரம்ப வசனங்களில் வரும் இன்னொரு நோக்கத்திற்கும் வழிவகுக்கிறது.

***ஏசாயா 2:1-4***, [1]ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா யூதாவையும் எருசலேமையும் குறித்துக் கண்ட தரிசனம். [2]கடைசிநாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்; எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள்.
[3]திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும். [4]அவர் ஜாதிகளுக்குள் நியாயம் தீர்த்து, திரளான ஜனங்களைக் கடிந்துகொள்வார்; அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும் தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள்; ஜாதிக்குவிரோதமாய் ஜாதி பட்டயம் எடுப்பதில்லை, இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை.

மகா உபத்திரவம் நடைபெறும் போது இஸ்ரவேல் தேசமானது மீண்டும் ஒருமுறை தன்னுடைய உயிருக்காக ஓடும். இறுதியாக அவர்கள் ஆயிரவருட அரசாட்சியின் (மில்லேனியத்தின் millennium) போது இராஜ்ஜியமாக ஸ்தாபிக்கப்படுவார்கள்.

இறுதியாக ***சகரியா 12:10*** ஐ பார்ப்போம், “நான் தாவீது குடும்பத்தாரின்மேலும் எருசலேம் குடிகளின்மேலும்

*கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன். அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப் பார்த்து, ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்.*

***சகரியா 13:1*** *"அந்நாளிலே பாவத்தையும் அழுக்கையும் நீக்க, தாவீதின் குடும்பத்தாருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் திறக்கப்பட்ட ஒரு ஊற்று உண்டாயிருக்கும்.*

*இயேசுவின் இரத்தம் எல்லா பாவங்களையும் கழுவும்!*

*இந்த பாடத்தின் மூலம் இஸ்ரவேல் தேசம் மகா உபத்திரவத்திற்குள் கடந்து போகும் என்பதை தெளிவாக அடையாளம் கண்டுகொள்ளலாம். மேலும் மனம் திரும்புபவர்கள் தேவனின் கருணையினால் இரட்சிக்கப்படுவார்கள்.*